SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியனஆயல IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 11 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ரபிஉல் ஆகிர் 24

மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● திங்கள்கிழமை, அக்டோபர் 28, 2024 ● வெளியூர்: 29-10-2024, செவ்வாய்க்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 112 ● 6 பக்கம் ● ரூ.6

## குஜராத்தில்

# முதல் தனியார் ராணுவ விமான ஆலை

## பிரதமர் மோடி திறந்து வைத்தார்

**குஜராத், அக். 28-**

குஜராத் மாநிலம், வதோதராவில் உள்ள டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் (டி.ஏ.எஸ்.எல்) வளாகத்தை மோடி ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்த வளாகத்தில் ராணுவத்துக்கு தேவையான சி295 ரக விமானம் தயாரிக்கப்பட உள்ளது. இது இந்தியாவின் ராணுவ தளவாட உற்பத்தியில் மிகச்சிறந்த மைல்கல் ஆகும். இந்த ஆலைக்கு பிரதமர் மோடி கடந்த 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் அடிக்கல் நாட்டி இருந்தார்.

ராணுவத்துக்காக மொத்தம் 56 சி295 ரக விமானங்களை வாங்க ஏர்பஸ் நிறுவனத்துடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. இதில் 16 விமானங்கள் ஸ்பெயினில் தயாரிக்கப்பட்டு இந்தியாவுக்கு வழங்கப்படும். மீதமுள்ள 40 விமானங்கள் டி.ஏ.எஸ்.எல் நிறுவனத்தால் தயாரிக்கப்படும்.

ராணுவ விமானத்தை தயாரிக்க இருக்கும் முதல் தனியார் வளாகமாக இது இருக்கும். இந்த விமான தயாரிப்பு திட்டத்துக்கு டாடா நிறுவனம் மட்டுமல்லாது பாரத் எலக்ட்ரானிக்ஸ், பாரத் டைனமிக்ஸ் ஆகிய பொதுத்துறை நிறுவனங்களும் சில குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களும் தங்களது பங்களிப்பை அளிக்கும்.




இதைதொடர்ந்து, பிரதமர் மோடி லட்சுமி விலாஸ் அரண்மனையை பார்வையிட்டார். மதியம் 2.45 மணிக்கு அம்ரேலிக்கு செல்லும் அவர் பாரத் மாதா சரோவர் அணையை திறந்து வைக்கிறார்.

இதுதவிர அங்கு நடைபெறும் பொது நிகழ்ச்சியில், மொத்தம் ரூ.4,800 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்து பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இந்த ராணுவ விமான ஆலை மூலம், விமானப்படைக்குத் தேவையான 'சி295' ரக போர் விமானங்களைத் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தொழிற்சாலையில் ஏர்பஸ் நிறுவனமும், டாடா குழுமமும் இணைந்து விமானங்களை தயாரிக்க உள்ளன.

## தீபாவளி சிறப்பு பஸ்கள் இன்று முதல் இயக்கம்

**சென்னை, அக். 28-**

தீபாவளி பண்டிகை வரும் 31ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, தமிழகம் முழுவதும் இன்று முதல் 3 நாட்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் என போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையில் சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் பஸ்களுடன் 4 ஆயிரத்து 900 சிறப்பு பஸ்கள், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் 2 ஆயிரத்து 910 சிறப்பு பஸ்கள் இயக்க போக்குவரத்து துறைநடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, இன்று வழக்கமான பஸ்களுடன் சென்னையில் இருந்து 700 பஸ்களும், தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்து பிற முக்கிய பகுதிகளுக்கு 330 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த 3 நாட்களுக்கு 14 ஆயிரத்து 086 பஸ்களை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு பஸ்களில் பயணிக்க இதுவரை 1.22 லட்சத்துக்கும் மேற்பட்டோர் முன்பதிவு செய்துள்ளனர். சென்னையில் இருந்து மட்டும் பஸ்கள் வாயிலாக 5 லட்சம் பேர் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருச்சி, கரூர், மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், நாகர்கோவில், மார்த்தாண்டம், திருவனந்தபுரம், காரைக்குடி, புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, திருப்பூர், பொள்ளாச்சி, ராமேசுவரம், சேலம், கோயம்புத்தூர், எர்ணாகுளம், திண்டிவனம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், விருத்தாச்சலம், அரியலூர், திட்டக்குடி, செந்துறை, ஜெயங்கொண்டம், போளூர், வந்தவாசி மற்றும் திண்டிவனம் வழியாக திருவண்ணாமலை, புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் மற்றும் திண்டிவனம் வழியாக பண்ருட்டி, நெய்வேலி, வடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் செல்லும் பஸ்கள் திண்டிவனம், விக்கிரவாண்டி, பண்ருட்டி வழியாக கும்பகோணம், தஞ்சாவூர் மார்க்கமாக பட்டுக்கோட்டை, மன்னார்குடி செல்லும் அனைத்து வழித்தட பஸ்கள் வழக்கம் போல் இயக்கப்படும்.

வேலூர், ஆரணி, ஆற்காடு, திருப்பத்தூர், காஞ்சீபுரம், செய்யாறு, ஓசூர் மற்றும் பெங்களூர் செல்லும் பஸ்கள் மற்றும் திருத்தணி வழியாக திருப்பதி செல்லும் பஸ்கள் மற்றும் கிழக்கு கடற்கரை சாலை வழியாக செல்லும் புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, கும்பகோணம், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, வேதாரண்யம், திருவாரூர் மற்றும் திருத்துறைபூண்டி செல்லும் பஸ்கள் இயக்கப்படும்.

பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை மற்றும் செங்குன்றம் வழியாக ஆந்திர மாநிலத்திற்கு செல்லும் பஸ்கள் மற்றும் வழக்கமாக இயக்கப்படும் திருச்சி, சேலம், கும்பகோணம் மற்றும் திருவண்ணாமலை பஸ்கள் இயக்கப்படுகிறது.

உதவி எண்கள்: 7845700557, 7845727920, 7845740924.

கார் தெரிவிப்பதற்கான எண்கள்:

அரசு பேருந்துகள்: 94450 14436

ஆம்னி பேருந்துகள்: 04424749002, 26280445, 26281611.

இதனிடையே கிளாம்பாக்கத்தில் செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகளை அமைச்சர்கள் சிவசங்கர், சேகர்பாபு ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சிவசங்கர், "கிளாம்பாக்கத்தில் அரசு பஸ்கள், ஒப்பந்த அடிப்படையிலான தனியார் பஸ்கள், ஆம்னி பஸ்களை நிறுத்திவைக்க போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2 ஆயிரம் பேர் அமர இருக்கை, இலவச மருத்துவமனை, ஆம்புலன்ஸ், பாதுகாப்புக்காக காவல் அதிகாரிகள், 3 மடங்கு அதிகமாக தூய்மை பணியாளர்கள், 8 ஏடிஎம் இயந்திரங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் 18 இயந்திரங்கள், தாய்மார்கள் பாலூட்ட 3 அறைகள், இலவச டிராலிகள், 140 தங்குமிடம் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச் சாவடிகளில் நெரிசல் இல்லாமல் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

## முதலமைச்சர் தலைமையில் சட்டசபை தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டம்




**சென்னை, அக். 28-**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக சட்டசபை தொகுதிகளின் பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஆலோசனை கூட்டத்தில் திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றனர். வரும் 2026 சட்டசபை தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக 234 தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்ட பார்வையாளர்களுடன் ஆலோசனை நடைபெற்றது.

## எந்த சக்தியாலும் திமுகவை அசைக்க முடியாது: சேகர்பாபு



**சென்னை, அக். 28-**

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு விக்கிரவாண்டியில் நேற்று பிரமாண்டமாக நடைபெற்றது. லட்சக்கணக்கான தொண்டர்கள் திரண்டிருந்த மாநாட்டில் பேசிய விஜய், இந்த நாட்டை பாழ்படுத்தும் பிளவுவாத அரசியல் செய்வோர்தான் தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை ரீதியான முதல் எதிரி. திராவிட மாடல் ஆட்சி என்று பெரியார், அண்ணா பெயரை வைத்து தமிழ்நாட்டை சுரண்டி கொள்ளையடிக்கும் ஒரு குடும்ப சுயநலக்கூட்டம் தான் அடுத்த எதிரி,

அரசியல் எதிரி. கொள்கை, கோட்பாடு அளவில் தேசியத்தையும், திராவிடத்தையும் பிரித்துபார்க்க போவதில்லை. திராவிடமும், தமிழ் தேசியமும் இந்த மண்ணின் இரண்டு கண்கள். நாம் எந்த குறிப்பிட்ட அடையாளத்தின்கீழும் நம்மை சுருக்கி கொள்ளாமல், மதச்சார்பற்ற சமூக நீதிகொள்கைகளை, நமது கொள்கை அடையாளமாக முன்னிறுத்தி செயல்பட போகிறோம் என்று கூறினார்.

இதுதொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு கூறுகையில்,

* திமுக கூடி கலையும் மேகக்கூட்டங்கள் இல்லை கொள்கை கூட்டம். எந்த சக்தியாலும் திமுகவை அசைத்து பார்க்க முடியாது.

* தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளவரை எந்த சக்தியாலும் திமுகவை அசைத்துக்கூட பார்க்க முடியாது.

* புயல், மழை, வெள்ளம் வந்தாலும் திமுகவை அசைத்துப்பார்க்க முடியாது என்று கூறினார்.

## ஜார்க்கண்ட் சட்டசபை தேர்தல்: 2ம் கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிட்ட பாஜக

**ராஞ்சி, அக். 28-**

81 தொகுதிகளை கொண்ட ஜார்க்கண்ட் சட்டசபைக்கு நவம்பர் 13 மற்றும் 20 தேதிகளில் இரண்டு கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. இதில், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம் ஓரணியாக தேர்தலை சந்திக்கின்றன. மற்றொரு புறம், பாஜக, ஏ.ஜே.எஸ்.யூ., ஐ.ஜ.த., எல்.ஜே.பி., ஓரணியாக தேர்தலில் போட்டியிடுகின்றனர். இதில் பாஜக 68 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

இந்நிலையில், பாஜக தனது 2ம் கட்ட வேட்பாளர் பட்டியலை இன்று வெளியிட்டுள்ளது. அதில் ஜார்க்கண்ட் முதல்மந்திரி ஹேமந்த் சோரனுக்கு எதிராக பர்ஹைத் தொகுதியில் பாஜக வேட்பாளராக கம்லியேல் ஹெம்ப்ரோம் அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஹெம்ப்ரோம் 2019 இல் ஏ.ஜே.எஸ்.யூ. கட்சி சார்பில் பர்ஹைத் தொகுதியில் போட்டியிட்டு 2,573 வாக்குகளைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக, பாஜக 66 வேட்பாளர்கள் அடங்கிய முதற்கட்ட பட்டியலை கடந்த 19ம் தேதி வெளியிட்டது.

# உதயசூரியன் என்றுமே நட்சத்திரங்களைப் பார்த்து அஞ்சியது கிடையாது: தமிழச்சி தங்கபாண்டியன்



சென்னை, அக். 29-
தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு விக்கிரவாண்டி வி.சாலையில் நேற்று (அக். 27) நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு வந்த விஜய், சுதந்திரப் போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து ரிமோட் மூலம் மேடையில் இருந்தே 100 அடிக் கம்பத்தில் கொடியேற்றினார். பின்னர் தொண்டர்களிடையே பேசிய அவர் அரசியல், தங்களின் அரசியல் நிலைப்பாடு, கட்சியின் கொள்கை, கொள்கைத் தலைவர்கள் குறித்து பேசினார். பெண்களை கொள்கைத் தலைவர்களாக கொண்டு இயங்கும் ஒரே கட்சி தவெக தான் எனவும் தெரிவித்தார்.

பேச்சுக்கு நடுவே பல கட்சிகளையும் மறைமுகமாக சாடினார். பிளவுவாத அரசியல், திராவிட மாடல், நீட் எதிர்ப்பு, சாதி வாரி கணக்கெடுப்பு என முதல் மாநாட்டிலேயே அரசியல் பிரச்சினைகள் குறித்து பேசினார். தொடர்ந்து, மக்கள் விரோத ஆட்சியை நடத்தி விட்டு திராவிட மாடல் என ஏமாற்றுகிறார்கள். அவர்கள் பாசிச ஆட்சி என்றால், நீங்கள் பாயச ஆட்சியா?. பெரியார், அண்ணா பெயரை சொல்லி, திராவிட மாடல் என்ற பெயரில் குடும்ப ஆட்சியை நடத்துகிறார்கள். அவர்களும் நம்முடைய கொள்கை எதிரி தான். வீடு, உணவு, வேலை இவை மூன்றுமே அடிப்படை தேவை இதை கொடுக்க முடியாத அரசு, இருந்தாலென்ன? இல்லாவிட்டா லென்ன?" என ஆவேசமாக பேசியிருந்தார்.

இந்நிலையில், திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் தனது எக்ஸ்தளத்தில் வீடியோவுடன் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில், எத்தனை கட்சிகள் வந்தாலும் சரி; அதுகுறித்து கவலையில்லை; ஏனெனில் உதயசூரியன் என்றுமே நட்சத்திரங்களைப் பார்த்து அஞ்சியது கிடையாது; உதயசூரியனுக்கு நட்சத்திரங்களைப் பற்றி கவலையும் கிடையாது என பதிவிட்டுள்ளார்.

# அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு சார்பில் தென்னிந்திய மாநாடு



வல்லம், அக். 28-
அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு சார்பில் பாண்டிச்சேரி தென்னிந்திய மாநாடு இல் பாண்டிச்சேரி செண்பகா ஹோட்டலில் நடைபெற்றது.

அகில இந்திய வழக்கறிஞர் கூட்டமைப்பு தலைவர் டி.கே.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பாண்டிச்சேரி ஆளுநர் கைலாசநாதன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

மெட்ராஸ் உயர் நீதிமன்ற நீதி அரசர் கிருஷ்ணன், செஞ்சி டிஎஸ்பி செந்தில்குமார், பார் அசோசியேஷன் தலைவர் செல்வம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மேலும் அகில இந்திய வழக்கறிஞர் கூட்டம் மாநில தலைவர் சாரநாத் வரவேற்புரை ஆற்றினார். மாநில துணை தலைவர்கள் வழக்கறிஞர்கள் சுருளிராஜன், கோட்டீஸ்வரன், சரவணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இறுதியில் பாண்டிச்சேரி மாநில தலைவர் வழக்கறிஞர் சுகுமார் நன்றி கூறினார்.

# திறந்தவெளியில் மலம் கழித்தால் அபராதம் வசூலிக்க முடிவு

நெல்லை, அக். 28-
நெல்லை மாவட்ட பேரூராட்சி பகுதிகளில் பொது இடங்களில் சிறுநீர், மலம் கழித்தால் அபராதம் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக நாங்குநேரி மற்றும் வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் இன்று முதல் அமலுக்கு வந்துள்ளது. இதன்படி பொது இடங்களில் சிறுநீர் கழித்தால் 100 ரூபாயும், திறந்தவெளியில் மலம் கழித்தால் 500 ரூபாயும் அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனிநபர் கழிப்பிடத்தையோ, பொது கழிப்பிடத்தையோ பொதுமக்கள் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்தினால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு தொற்று நோய் பரவும் அபாயம் இருப்பதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ‘கவலைப்படாதீங்க.. நான் களத்துக்கு வந்துவிட்டேன்’: மாநாட்டில் விஜய் அதிரடி பேச்சு



சென்னை, அக். 28-
தமிழக வெற்றிக்கழகம் என்ற கட்சியை தொடங்கிய நடிகர் விஜய், தனது முதல் மாநில மாநாட்டை விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் நேற்று நடத்தினார். மாநாட்டு மேடைக்கு சரியாக நான்கு மணிக்கு வருகை தந்துள்ளார். மாநாட்டில் லட்சக்கணக்கான தொண்டர்களை பார்த்ததும் நெகிழ்ச்சி அடைந்த விஜய் கண்கலங்கினார். சுதந்திர போராட்ட வீரர்கள், மொழிப்போர் தியாகிகளுக்கு மலர்தூவி மரியாதை செலுத்திய விஜய், மாநாட்டில் 100 அடி உயர கொடிக்கம்பத்தில் கட்சிக் கொடியை ரிமோட் மூலம் ஏற்றினார். தனது பெற்றோரை ஆரத்தழுவி ஆசி பெற்ற பின்பு மாநாட்டில் விஜய் பேசியதாவது;

யார் கீழே, யார் மேலே என்று நாம் பார்க்க போவதில்லை. நாம் எல்லாம் ஒன்றுதான். எல்லோரும் சமம்தான். இந்த மேடையில் கோபமாக கொந்தளித்தால் பேசப்படுவோம் என்ற விஷயம் முன்பு இருந்தது, அது நமக்கு சரிப்பட்டு வராது. கோபமாக கொந்தளிப்பதை விட்டு விட்டு சொல்ல வந்ததை சொல்லி விட வேண்டும். அறிவியல் தொழில் நுட்பம்தான் மாற வேண்டுமா?, அரசியல் மாறக்கூடாதா?, மாறணும். இல்லையென்றால் இந்த புதிய உலகம், புதிய அலை மாற்றி விடும். மாறாதது மனித பிறப்பு, பசி, வேலை, உழைப்பு, பணம் மட்டும் தான்.

திராவிடமும், தமிழ் தேசியமும் எங்களது இரு கண்கள். தகுதி இருந்தும் நீட் தேர்வு தடையாக உள்ளது. எனது சகோதரி வித்யாவை இழந்த போது ஏற்பட்ட அதே வலியை சகோதரி அனிதாவை உயிரிழந்த போதும் நான் பெற்றேன். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். நான் கூத்தாடி தான். அரசியலுக்கு எம்ஜிஆர், என்டிஆர் வந்த போதும் கூத்தாடிகள் என்று தான சொன்னார்கள். கூத்து என்பது இந்த மண்ணோடும் மக்களுடன் கலந்து. நான் உங்களில் ஒருவன். இனிமேல் கவலைப்படாதீங்க. உங்கள் விஜய் களத்துக்கு வந்துட்டான். நான் களத்துக்கு வந்துவிட்டேன்.

பெரியாரை கொள்கைத் தலைவராக ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அவரது கொள்கையான கடவுள் மறுப்பு கொள்கையில் உடன்பாடில்லை. பெரியாரின் கொள்கைகளான பகுத்தறிவு, சமூக நீதி கொள்கைகளை முன்னெடுப்போம். வெறுப்பு அரசியலை கையில் எடுக்கப்போவதில்லை. பச்சை தமிழர் காமராஜர் வழியில் தமிழக வெற்றிக்கழகம் செயல்படும்.

ஊழலில் மலிந்து முகமூடியை அணிந்து கொண்டு நம்மை ஆள்பவர்களே நமது எதிரி மதவெறி பிடித்தவர்களும் ஊழல்வாதிகளும் நமது எதிரிகள். என் மீது அவதூறு பரப்பினால் நான் பயப்படமாட்டேன். என்னை வீழ்த்த முடியாது.

மக்கள் விரோத ஆட்சியை நடத்தி விட்டு திராவிட மாடல் என ஏமாற்றுகிறார்கள். அவங்கள் பாசிச ஆட்சி என்றால், நீங்கள் பாயச ஆட்சியா? பெரியார், அண்ணா பெயரை சொல்லி, திராவிட மாடல் என்ற பெயரில் குடும்ப ஆட்சியை நடத்துகிறார்கள். அவர்களும் நம்முடைய கொள்கை எதிரி தான். வீடு, உணவு, வேலை இவை மூன்றுமே அடிப்படை தேவை. இதை கொடுக்க முடியாத அரசு, இருந்தாலென்ன? இல்லாவிட்டாலென்ன? 2026ல் தனிப்பெரும்பான்மையுடன் மக்கள் வெற்றி பெற வைப்பார்கள் எனக்கூறிய விஜய் நம்முடன் வர நினைப்பவர்களுடன் இணைந்து பணியாற்றவும் தயார். கூட்டணி கட்சிகளுக்கு ஆட்சி, அதிகாரத்தில் பங்கு அளிக்கப்படும். 2026ம் ஆண்டு புதிய அரசியல் களத்தின் புத்தாண்டு. உறுதியுடன் இருங்கள். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்.” இவ்வாறு அவர் பேசினார்.

# தமிழக அரசின் சாதனைகள் புகைப்படக் கண்காட்சி



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம் வேடப்பட்டி கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

## தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்

28.10.2024 (திங்கள்கிழமை)

# பெரிய ஏமாற்றம்

நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதாவுக்கு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. பா.ஜனதா 240 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றிருந்த நிலையில், கூட்டணி கட்சிகளின் ஆதரவோடுதான் ஆட்சியமைக்க முடியும் என்ற கட்டாய சூழ்நிலை ஏற்பட்டது.

இந்த இக்கட்டான சமயத்தில் ஆபத்பாந்தவனாக வந்து பா.ஜனதாவுக்கு கை கொடுத்தது, ஆந்திராவின் சந்திரபாபு நாயுடுவின் தெலுங்கு தேசம் கட்சியும், பீகாரின் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதா தளமும்தான். தெலுங்குதேசம் 16 இடங்களிலும், ஐக்கிய ஜனதா தளம் 12 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தது. ஆட்சியமைக்கும் நேரத்தில், இந்த இரு கட்சிகளுமே தங்கள் மாநிலங்களுக்கு தேவையான சில கோரிக்கைகளை முன்வைத்தன. பா.ஜனதாவும் ஆட்சியமைத்தவுடன் தாக்கல் செய்த முதல் பட்ஜெட்டை, “இது ஆந்திராவுக்கும், பீகாருக்குமான பட்ஜெட்” என்று எதிர்க்கட்சிகள் வர்ணித்தன.

அந்த அளவுக்கு, ஆந்திராவுக்கு மட்டும் ரூ.15 ஆயிரம் கோடி உள்பட பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. பீகாருக்கும் சாலை திட்டங்களுக்கு மட்டும் ரூ.26 ஆயிரம் கோடி, புதிய விமான நிலையங்கள், மருத்துவ கல்லூரிகள் என்று அடுக்கடுக்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. இந்த இரு மாநிலங்களுக்கும் புதிய அறிவிப்புகள் என்பது தொடர் கதையாகிவிட்டது. கடந்த வாரம் வியாழக்கிழமை பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் மந்திரி சபை கூட்டம் நடந்தது. இதில் புதிதாக என்னென்ன அறிவிப்புகள் வெளியிடப்படும்? என்று நாடே எதிர்பார்த்தது. தமிழ்நாட்டுக்கு ஏதாவது அறிவிக்கப்படுமா? என்று தமிழக மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ், ஆந்திராவுக்கும், பீகாருக்கும் பம்பர் பரிசுகளை அளிப்பதுபோல 2 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார். இரு மாநிலங்களுக்கும் சேர்த்து ரூ.6,798 கோடி மதிப்பிலான புதிய ரெயில் பாதை திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில், பீகாருக்குத்தான் அதிக நிதியாக ரூ.4,543 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பீகாரில் இருந்து நேபாளத்துக்கு உத்தரபிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களையும் இணைத்து வர்த்தக வழித்தடம் மற்றும் ஆன்மிக வழித்தடம் அமைப்பதற்காக இரட்டை ரெயில் பாதையை உருவாக்கும் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அயோத்தியில் ராமர் பிறந்த பூமியையும், நேபாளத்தில் சீதா தேவி பிறந்த பூமியையும் இணைக்கும் திட்டம் இது என்று ரெயில்வே மந்திரி பெருமைபட கூறியிருக்கிறார். ஆந்திராவைப் பொருத்தமட்டில் ரூ.2,245 கோடி செலவில் அம்மாநில தலைநகரான அமராவதியையும், மற்ற முக்கிய நகரங்களான ஐதராபாத், சென்னை, கொல்கத்தா நகரங்களை இணைக்கும் வகையில் 57 கிலோ மீட்டருக்கு புதிய ரெயில் பாதை அமைக்கும் திட்டத்துக்கு ஒப்புதல் தரப்பட்டது.

இந்த ரெயில் பாதையில் கிருஷ்ணா நதிக்கு குறுக்கே 3.2 கிலோ மீட்டருக்கு ஒரு புதிய பாலமும் கட்டப்படும். இதன்மூலம் மசூலிப்பட்டினம், கிருஷ்ணாபட்டினம் மற்றும் காக்கிநாடா துறைமுகங்களுக்கு இணைப்பு ஏற்படும். இதெல்லாம் சரிதான், அண்டை மாநிலமான தமிழ்நாட்டுக்கு எந்த புதிய திட்டமும் இல்லையே என்பதுதான் பெரிய ஏமாற்றமாக இருக்கிறது.

# நான் யார் காலையும் நம்பி பயணிக்காதவன்: சீமான்

சென்னை, அக். 28-
நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

விஜய் என்னை விமர்சனம் செய்கிறார் என ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்?

அவரின் கொள்கை கோட்பாடு எங்களின் கொள்கையோடு ஒத்துப்போகவில்லை.

நான் கூறுவது என் நீண்ட கால இன வரலாறு. இங்குள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு என்ன என்பது.

திராவிட கொள்கைக்கு மாற்றாக வந்தவர்கள் நாங்கள். தமிழ் நேயர்கள்.

கட்சி ஆரம்பித்து அரசியல் அதிகாரத்திற்கு வரவேண்டும் என நான் வரவில்லை. படம் எடுத்து பிழைக்க வந்தவன்.

வரலாறு, காலம் எனக்கு இந்தப் பணியை கொடுத்தது. காரணம் என் இனத்தின் மரணம்.

எனக்கு அளிக்கப்பட்ட கடமையை நான் செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டேன். அதை செய்கிறேன்.

திராவிடமும், தேசியமும் எனது இரு கண்கள் என விஜய் சொன்னால், அது எங்களது கொள்கைக்கு நேர் எதிரானது. திராவிடமும் தமிழ் தேசியமும் ஒன்று கிடையாது. அது வேறு. இது வேறு.

இது எனது நாடு. எனது தேசம். இங்கு வாழும் மக்களுக்கான அரசியல் தமிழ் தேசிய அரசியல்.

விஜய் பேச்சில் எனக்கு உடன்பாடு இல்லை. பெரியாரின் கொள்கைகளை முன்னெடுப்பேன் என்ற விஜய் பேச்சிலும் ஒத்துப் போகவில்லை.

என்.டி.ராமாராவ், தெலுங்கு தேசம் கட்சி என பெயர் வைத்தபோது யாரும் எதிர்த்துப் பேசவில்லை. நாங்கள் தமிழ் தேசம்பெயர் வைத்த போது பாசிசம், பிரிவினைவாதம் என சொல்கிறீர்கள். இது ஏற்புடையது அல்ல.

என் பயணம் என் கால்களை நம்பித்தான்; யார் காலையும் நம்பி பயணிக்காதவன். நான் மிகுந்த தெளிவான பயணத்தை கொண்டவன். நான் தனித்துப் போட்டியிடுவேன் என ஏற்கனவே சொல்லிவிட்டேன்; நாங்கள் யாரோடும் கூட்டணி இல்லை என தெரிவித்தார்.

# முதியோர் இல்லத்தில் தீபாவளி கொண்டாட்டம்



**கும்பகோணம், அக். 28-**

கும்பகோணம் அருகே கிருஷ்ணாபுரத்தில் உள்ள கிராமிய முதியோர் இல்லத்தில், குடந்தை சிட்டி லயன்ஸ் சங்கம் சார்பாக, ராணுவ முன்னாள் டாக்டர் சுந்தரம் தனது சொந்த செலவில் ரூபாய் 25000 மதிப்பில் 50 பேருக்கு வேட்டி, சட்டை, புடவை, ஸ்வீட், காரம், வெடி வகைகள் வழங்கப்பட்டு தீபாவளி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மண்டல தலைவர் இலட்சுமி காளிதாஸ், வட்டாரத் தலைவர் கோபாலகிருஷ்ணன், சங்க முன்னாள் மூத்த உறுப்பினர்கள் செல்வம், சந்திரமோகன், டாக்டர் சுந்தரம், சங்க தலைவர் முரளி, செயலாளர் மணி, பொருளாளர் ஜான் லூயிஸ், மண்டல ஒருங்கிணைப்பாளர் காந்தி லால் பட்டேல் மற்றும் ஹரிலால் பட்டேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புதுச்சேரி விநாயக மிஷன் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் கார்டியோனிக்ஸ் கொண்டாட்டம்




**புதுச்சேரி, அக். 28-**

புதுச்சேரி விநாயக மிஷன் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை, இதயவியல் பிரிவு சார்பில் கார்டியோனிக்ஸ் கொண்டாட்டம் நடந்தது. இந்நிகழ்ச்சியானது விநாயகா மிஷன் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் கணேசன் அறிவுறுத்தலின்படி, அலைடு ஹெல்த் சயின்ஸ் துறைகளின் டீன் டாக்டர் பி.செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.

இதய தினத்தை முன்னிட்டு, இதய தொழில்நுட்பத் துறையானது விருந்தினர் சொற்பொழிவு மற்றும் கல்லூரி களுக்கிடையேயான சுவரொட்டி போட்டியை நடத்தியது" இரண்டு கைகள் ஒரு உயிரைக் காப்பாற்ற முடியும்". பேக்டிராப் மற்றும் வரவேற்பு நடனத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. நிகழ்ச்சியில் பேராசிரியர் ஆண்ட்ரூ ஜான் சில்வெஸ்டர் வரவேற்பு உரையை நிகழ்த்தினார். மோனிகா, இருதய தொழில்நுட்ப உதவிப் பேராசிரியர், எஸ் ஆர் எம், கட்டங்குளத்தூர், சென்னை சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு "இதய செயலிழப்பு மற்றும் மாரடைப்பு பற்றிய புரிதல்" பற்றி ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார். துறை மாணவர்கள் இதய செயலிழப்பு பற்றிய விழிப்புணர்வு நாடகத்தை நடத்தினர். பட்ட மேற்படிப்பு எக்கோ கார்டியோகிராபி முதலாம் ஆண்டு மாணவர்கள் தேவராஜ். "பிறவி இதய நோய் மற்றும் அதன் நடைமுறைகள்" மற்றும் சசிகலா "கார்டியோமயோபதி" பற்றி ஒரு சுவரொட்டி விளக்கக் காட்சியை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்குவிப்புச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டு, பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இயக்குநர் பேராசிரியர் ஆண்ட்ரூ ஜான் சில்வெஸ்டர் இதயவியல் துறை பேட்ஜ் லோகோவை அறிமுகப்படுத்தினார். இறுதியாக துறை சார்பாக கல்லூரிக்கு கேனான் டி.எஸ்.எல். ஆர் கேமராவை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் நிறைவாக கேக் வெட்டும் விழா நடைபெற்றது. மிஸ்.மிராக்லின் ஷரோன் விரிவுரையாளர் நன்றி உரையாற்றி னார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நிர்வாக அதிகாரி சந்துரு, உதவி பேராசிரியர்கள் சுபாஷினி மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர். இந்நிகழ்வில் சுமார் 230 மாணவ, மாணவிகள் பயனடைந்தனர்.

# ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு

**சேலம், அக். 28-**

ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

ஊழல் தடுப்பு விழிப் புணர்வு வாரத்தையொட்டி, ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி தலைமையில் ஏற்றுக் கொள்ளப் தீஸ்பட்டது.

ஒவ்வொரு ஆண்டும் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் பிறந்த நாளையொட்டி, ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடை பிடிக்கப்படுகிறது. அந்தவகையில், இந்த ஆண்டு 28.10.2024 முதல் 03.11.2024 வரை ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரமாக கடைபிடிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதனையொட்டி,



சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி வாசிக்க, அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் மேனகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) சிவசுப்பிரமணியன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் மயில் உட்பட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### கரும்பு விவசாயிகளுக்கு

# சிறப்பு ஊக்கத்தொகையை திமுக அரசு வழங்க வேண்டும்

## எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்



**சென்னை, அக். 28-**

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கரும்பு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக ரூ.4000 வழங்கப்படும் என்று சட்டமன்ற பொதுத் தேர்தலின் போது வாக்குறுதி அளித்து ஆட்சியைப் பிடித்து 41 மாதங்கள் கடந்த நிலையில், 202324ம் ஆண்டில் கரும்பு சப்ளை செய்த அனைத்து விவசாயிகளுக்கும் சிறப்பு ஊக்கத்தொகை டன் ஒன்றுக்கு ரூபாய் 215/ வழங்கப்படும் என்று சட்டமன்றத்தில் வேளாண்மை துறை அமைச்சர் அறிவித்தார்.

அதையே உறுதி செய்து தீபாவளிக்கு முன்பு அனைத்து கரும்பு விவசாயிகளுக்கும் இத்தொகை வழங்கப்படும் என்று அரசின் சார்பில் செய்தி குறிப்பும் வெளியிடப்பட்டது. ஆனால் இன்று வரை இத்தொகை கரும்பு விவசாயிகளுக்கு வழங்குவதற்கான எந்த விதமான நடவடிக்கைகளையும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு எடுக்கவில்லை என்பதால், தீபாவளிக்கு இன்னும் ஒரு சில நாட்களே உள்ள நிலையில் ஊக்கத்தொகை கிடைக்காத கரும்பு விவசாயிகள் இந்தாண்டு தீபாவளியை வழக்கமான உற்சாகத்தில் கொண்டாட முடியாமல் மிகுந்த அதிருப்தியில் உள்ளனர். உடனடியாக கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகையை வழங்க முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# India vs New Zealand: Sophie Devine's all-round show helps NZ level series 1-1, but Radha Yadav has a day to remember





**New Delhi, Oct.28-**

Amelia Kerr – player of the final and player of the tournament at the T20 World Cup recently – was ruled out of the remainder of the ODI series against India in Ahmedabad. An absence like that is not easy to fill because New Zealand effectively needs two players to do the job that an elite allrounder like Kerr does.

Thankfully for them, they had a certain Sophie Devine leading their charge. The White Ferns captain put in an all-round show (79 off 86 balls and 3/27) that more than made up for Kerr's absence as the visitors beat Harmanpreet Kaur's India by 76 runs to register an emphatic win in the second ODI and level the three-match series 1-1.

Chasing 260 was going to be tricky but India's batting performance was woeful from the word go. Smriti Mandhana was once again out caught at backward point off a lazy lofted shot, Shafali Verma soon followed suit by getting trapped plumb in front and wasting a review to boot. The only hint of resistance from a top-order batter came from captain Harmanpreet, who returned to the XI and played a decent hand of 24 but Devine accounted for her counterpart. At one point India were 108/8 and looked to be in danger of folding well before the 30-over mark.

But then came a valiant partnership of 70 for the 9th wicket between Radha Yadav and Saima Thakor that kept NZ on the field much longer than they'd have wanted. That the team's highest stand came that far down said a story but the two lower-order batters produced what is now India's record for the 9th wicket partnership in women's ODIs. Radha eventually fell for a defiant 48.On the personal front, it was actually a memorable day for Radha. She is one of the few Indian players who could stake a place in the squad, and even the playing XI regularly, just purely based on her fielding skills. That she is a solid spinner and a handy lower-order batter makes her a proper 3-dimensional asset.

And on Sunday she showed off her stunning catching skills — not once, but twice. In the 32nd over, debutant Priya Mishra was in the middle of a solid spell but was still searching for her first senior international wicket. She had been unlucky until that point but Radha came up with a blinder. As Brooke Halliday mis-hit a wrong 'un from Priya, the ball skied over to Radha who started running back from cover. It still seemed a tough ask, but as the ball was on its way down, Radha put in a full-length dive and didn't let it slip as she landed heavily.

And before that, she had taken another fabulous catch to dismiss Georgia Plimmer. Deepti Sharma's ball stopped on the opener and her attempted push through midwicket looped up. It still looked to be falling safely until Radha put in a late dive to pluck the ball inches away from the ground. India's catching was still suspect overall on the day, but Radha's two efforts were a reminder why she is one of the best in the business. She also picked up four wickets but went for 69 runs.

Deepti, however, had the exact opposite kind of day. She had a nightmare on the field, dropping a few easy catches but was the best Indian bowler on display, with figures of 2/30 in her 10 overs. The decisive performance of the day, however, came from Devine who rode her luck early on before playing a well-constructed innings with the bat. Fellow veteran Suzie Bates too chipped in with a half-century at the top of the order to ensure NZ posted a total that was well out of India's reach.

# Gary Kirsten becomes latest victim of Pakistan cricket's constant churn, crisis



**New Delhi, Oct.28-**

Not allowed to revel too long in the remarkable turnaround Test series win over England – their first in four years – Pakistan cricket announced its latest stream of changes on Monday.

A new-white ball captain – wicketkeeper Mohammad Rizwan – was announced ahead of the start of the ODI series in Australia next week in a press conference in Lahore, flanked by his new vice-captain Salman Agha, Pakistan Cricket Board (PCB) chairman Mohsin Naqvi, and member of the selection committee Aaqib Javed. Missing from the scene, and from the country, was their white-ball coach Gary Kirsten, who, as it was later revealed, has now resigned from his duties.

Kirsten departs from his role six months after signing a two-year contract. The South African's exit highlights the constant cycle of change that this team have been under since the departure of board chairman Ahsan Mani in August 2021.

Kirsten was the eighth different man in that time that could call himself coach of the Pakistan men's cricket team, the latest in a split between white-ball and red-ball duties, the latter of which are presently under Jason Gillespie, who will be the interim white-ball coach for the Australia tour.

In that time, they have seen churn at the very top too. There have been four different chairmans of the board – Ramiz Raja, Najam Sethi, Zaka Ashraf, and Naqvi – each of whom have had to deal with tumultuous times and politicking in their reign. Selection has been equally inconsistent: there have been six different chief selectors and 28 different members that have picked teams for the men's side. It is no surprise, then, that strategies, team composition, and even the captains are constantly changing.Babar Azam had been the all-format captain until not too long ago, but then was replaced by Shaheen Shah Afridi in the white-ball format, and Shan Masood in the red-ball format. Babar returned as white-ball captain for the 2024 T20 World Cup, and now has been replaced by Rizwan.It comes as no surprise, then, that Kirsten is the latest to go through the revolving door of the Pakistan Cricket Board's set of decision-makers.

# கலாசார மையத்தில் கட்டுமான பணி முதலமைச்சர் ரங்கசாமி ஆய்வு



**புதுச்சேரி, அக். 28-**

புதுச்சேரி கடற்கரையில் உள்ள பழைய சாராய வடி ஆலை வளாகத்தில் நடந்து வரும் கலாசார மைய கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் ரங்கசாமி ஆய்வு செய்தார்.

புதுச்சேரி கவர்னர் மாளிகை புனரமைக்கப்பட உள்ளதால் தற்காலிகமாக அந்த மாளிகையை கலாச்சார மையத்திற்கு இடமாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் ஏற்கனவே ரூ. 13.4 கோடியில் கட்டப்பட்ட கலாச்சார மையம் முழுமை அடையாமல் இருந்தது.

இதையொட்டி, அந்த கட்டடத்தில் இருக்கைகள், கதவுகள், மின்சார வேலைகள், அழகு படுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வதற்கு, ரூ.3.88 கோடி மதிப்பில் கவர்னர் கைலாஷ்நாதன் முன்னிலையில் முதலமைச்சர் ரங்கசாமி கடந்த செப்டம்பர் மாதம் பூமி பூஜை செய்தார்.

இதைத் தொடர்ந்து பணிகள் நடந்து வந்த நிலையில், முதலமைச்சர் ரங்கசாமி திடீரென, கலாச்சார மையத்திற்கு சென்றார். அங்கு நடந்து வரும் கட்டுமான பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். விரைவாக பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# தூய்மைப்பணியில் ஈடுபட்ட பெண்களுக்கு புடவை வழங்கல்



**புதுச்சேரி, அக். 28-**

சாரோன் சொசைட்டி ஆஃப் பாண்டிச்சேரி சாலையோர ஆதரவற்றோர்களுக்கு பாதுகாப்பு அளித்தல், முதியோர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் போனற பல்வேறு சமூக பணிகளை செய்து வருகின்றது. அந்தவகையில் துப்புரவு பணியில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களும் தீபாவளியை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்ற நோக்கில் 26ம் தேதி இரவு புதுச்சேரி நகரப் பகுதியில் தூய்மைப்பணியில் ஈடுபட்ட பெண்களுக்கு புடவை மற்றும் பலகாரங்களை சாரோன் சொசைட்டி ஆஃப் பாண்டிச்சேரி நிறுவனர் மோகன் மற்றும் சுகுணா சாரோன் குடும்பத்தினர்கள் வழங்கினர். உடன் தன்னார்வ தொண்டர்கள் விப்பின் பிராசாத், ராஜ்குமார், ஷேபனாமோகன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# விநாயக மிஷன் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி



**புதுச்சேரி, அக். 28-**

புதுச்சேரி விநாயக மிஷன் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை, கண் ஒளியியல் பிரிவு சார்பில் உலக பார்வை தினம் அக்டோபர் 2024 முன்னிட்டு கிருமாம்பாக்கத்தில் உள்ள விழுதுகள் தொண்டு அறக்கட்டளை நிறுவனத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

புதுச்சேரி விநாயக மிஷன் ஆராய்ச்சி நிறுவனத்தின் அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் கண் ஒளியியல் பிரிவு சார்பில் உலக பார்வை தினம் அக்டோபர் 2024 கொண்டாடப்பட்டது. இத்தின மானது ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இத்தினத்தை முன்னிட்டு கிருமாம்பாக்கத்தில் உள்ள விழுதுகள் தொண்டு அறக்கட்டளை நிறுவனத்தில் உள்ள குழந்தைகளுக்கு "குழந்தைகளே உங்கள் கண்களை நேசியுங்கள்" என்ற கருத்தை முன்னிருத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியானது விநாயகா மிஷன் பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் எஸ். கணேசன் அறிவுறுத்தலின்படி, அலைடு ஹெல்த் சயின்ஸ் துறைகளின் டீன் டாக்டர் பி.செந்தில்குமார் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. நிகழ்ச்சியில் புதுச்சேரி பிரிவு இயக்குனர் பேராசிரியர் ஆண்ட்ரூ ஜான் சில்வெஸ்டர் தலைமை தாங்கி வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து கண் ஒளியியல் துறை மாணவர்களால் கண் சிகிச்சை முகாம் மற்றும் நடனம், நாடகம், விளக்கக்காட்சி, பேச்சு மூலம் கண்பார்வையின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. நிகழ்ச்சியின் முடிவில் தீபாவளியை முன்னிட்டு குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டது. பொது அறிவு திறன் போட்டி நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் சுமார் 54 மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் கண் ஒளியியல் துறை ஒருங்கிணைப் பாளர் பேராசிரியர் வெண்ணிலா நன்றி கூறினார். நிகழ்ச்சியின் நிறைவாக கல்லூரி நிர்வாகம் சார்பாக அனைத்து குழந்தைகளுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை நிர்வாக அதிகாரி திரு.சந்துரு கண் ஒளியியல் துறை பேராசிரியர் வெண்ணிலா, விரிவுரையாளர்கள் ஐயம்மா, அன்பு நிலவன், சூர்யா மற்றும் மாணவர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

# நாட்டு நலப்பணி திட்ட முகாம்




**கயத்தாறு, அக். 28-**

கடம்பூர் இந்து நாடார்கள் மேல்நிலைப் பள்ளியில் நாட்டு நலப்பணி திட்டம் முகாம் நடந்தது.

கடம்பூர் இந்து நாடார் மேல்நிலைப் பள்ளியில் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் ஏழு நாட்கள் முகாம் நடைபெற்றது. இந்த முகாமை கடம்பூர் இந்து நாடார் உறவின் முறையின் பொதுச் செயலாளர் த.ராஜன் தலைமை வகித்தார். பள்ளிச் செயலாளர் ராம்குமார் முன்னிலை வகித்தார். உறவின்முறை தலைவர் ஜெயராஜ் நாடார், பொருளாளர் அருணாசலம், சான்றோக்கப்பள்ளி செயலாளர் சிவக்குமார், சான்றோர் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி செயலாளர் புஷ்பகணேஷ் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். இந்த முகாமில் விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயக்குமார் பொன்னாடை போர்த்தி வரவேற்று, சிறப்புரை நிகழ்த்தினார். முகாமில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கடம்பூர் ஆரம்ப சுகாதார நிலையம், பள்ளி வளாகம், பொது இடங்களில் சுத்தம் செய்தனர், மழைகாலங்களில் வீடுகளில் தண்ணீர் தேங்கி நிற்காமலும், சுகாதாரத்தை நமக்கு நாமே பயன் படுத்தி கொள்ள வேண்டும் என துண்டு பிரசங்கங்களை வழங்கினார்கள். மேலும் கடம்பூர் முக்கிய பகுதிகளில், சாலை ஓரங்களில் ஒரு மரக்கன்றுகள் நடப்பட்டது. மாணவர்களுக்கு விவசாயம் காப்போம் என்ற தலைப்பில் திருநெல்வேலி வேளாண் வணிக விற்பனைக்குழு செயலாளர் எழில் உரை நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து சரிவிகித உணவு குறித்து அரசு சித்த மருத்துவ கல்லூரி உதவி பேராசிரியர் ராஜேஷ் மாணவ மாணவிகளுக்கு சிறப்புரையாற்றினார். இந்த முகாமின் திட்ட அலுவலர் நேசபுகழ் வருகை புரிந்த அனைவரையும் நன்றி உரையாற்றினார்.

# முப்புடாதி அம்மன் கோயில் வருஷாபிஷேக விழா



**தென்காசி, அக். 28-**

தென்காசி மாவட்டம் கோவிந்தப் பேரி ராஜாங்கபுரத்தில் முப்புடாதி அம்மன் கோயில் வருஷாபிஷேக விழா நடைபெற்றது. அதில் சோகோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு கோவிந்தப்பேரி ஊராட்சி மன்ற தலைவர் டிகே பாண்டியன் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். முடிவில் அன்னதானம் வழங்கப்பட்டது. ஊராட்சி துணைத் தலைவர் இசேந்திரன், ஊர் நாட்டாமை ராஜ், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# புதிய ஆழ்குழாய் கிணறு திறப்பு



**புதுக்கோட்டை, அக். 28-**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அலஞ்சிரங்காடு பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.13 லட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ள புதிய ஆழ்குழாய் கிணறு அமைப்பினை, பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் மெய்யநாதன் துவக்கி வைத்தார்.

உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# நடிகர் விஜய்க்கு முதலமைச்சர் ரங்கசாமி பாராட்டு



புதுச்சேரி, அக். 28-
த.வெ.க., தலைவர் விஜய்க்கு, புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி பாராட்டு தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் அரசியல் கட்சி துவங்குவதற்கு முன், புதுச்சேரியில் முதலமைச்சர் ரங்கசாமியை நேரில் சந்தித்து ஆசி பெற்று சென்றார்.

இதனை தொடர்ந்து, முதலமைச்சர் ரங்கசாமி த.வெ.க., மாநாடு குறித்த செய்திகளில் கவனம் செலுத்தி, கேட்டறிந்து வந்தார். நேற்று த.வெ.க., முதல் மாநாடு நிகழ்ச்சிகளை, தொலைக்காட்சியில், முழுதுமாக பார்த்தார். மாநாடு குறித்து முதலமைச்சர் ரங்கசாமி கூறியதாவது, நடிகர் விஜய்க்கு இளம் வயது. அவர் நினைத்திருந்தால் பல படங்களில் நடித்து, பல கோடிகள் சம்பளம் பெற்று இருக்க முடியும். ஆனால், மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக, சினிமாவே வேண்டாம் என்று அரசியலுக்கு வந்துள்ளார்.

இது பாராட்டுக்குரியது. மாநாட்டில் வந்துள்ளவர்கள் அனைவரும் இளைஞர்களாக உள்ளனர். மேடையிலும் அனைவரும் இளைஞர்களாக உள்ளனர். மாநாட்டில் இளைஞர்களின் எழுச்சியை பார்க்க முடிகிறது. மனதார பாராட்டுகள். இவ்வாறு அவர் கூறினார்.

# சின்ன மணிக்கூண்டை புனரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்த எம்.எல்.ஏ



புதுச்சேரி, அக். 28-
புனரமைக்கப்பட்ட பிரெஞ்சு காலத்து மணிக்கூண்டை அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

புதுச்சேரி புஸ்சி வீதியில் உள்ள சின்ன மணிக்கூண்டு பிரெஞ்ச் ஆட்சி காலத்தில் கட்டப் பட்டது. சுற்றுலா பயணிகள் இந்த மணிக்கூண்டின் முன் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்வது வழக்கம்.

பொலிவிழந்து காணப் பட்ட மணிக்கூண்டினை சீரமைக்க வேண்டும் என தொகுதி எம்.எல்.ஏ., அனிபால் கென்னடி புதுச்சேரி நகராட்சிக்கு கோரிக்கை வைத்தார். தொகுதி எம்.எல்.ஏ., மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.6 லட்சம் 5 ஆயிரம் செலவில் மணிக்கூண்டு புனரமைக்கப்பட்டது. பணிகள் முடிந்த நிலையில் இதனை அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பயன்பாட்டிற்கு அர்ப் பணித்தார்.

மணிகூண்டு கடிகாரம் காலை 5 மணியில் இருந்து இரவு 10 மணி வரை மணிக்கு ஒரு முறை திருக்குறள் ஒன்றை பொருளுடன் கூறும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. சீரமைப்பு பணிக்காக புஸ்சி மார்க்கெட் வியாபாரிகள் அனிபால் கென்னடி எம்.எல்.ஏ.,விற்கு சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் புதுச்சேரி நகராட்சி ஆணையர் கந்தசாமி, செயற்பொறியாளர் சிவபாலன், உதவி பொறியாளர் யுவராஜ், இளநிலை பொறியாளர் சண்முகம், பணியாளர் வெங்கடபரமானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இளநிலை பொறியாளர், ஓவர்சீர் காலி பணியிடங்களுக்கு தேர்வு: 1,551 பேர் பங்கேற்பு

புதுச்சேரி, அக். 28-
புதுச்சேரியில் நடந்த பொதுப் பணித்துறை இளநிலை பொறியாளர் மற்றும் ஓவர்சீர் பணியிடங்களுக்கான, எழுத்து தேர்வில் 1,551 பேர் பங்கேற்றனர்.

புதுச்சேரி பொதுப்பணித்துறையில் இளநிலை பொறியாளர் மற்றும் ஓவர்சீர் பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத்தேர்வு 6 மையங்களில் நேற்று நடந்தது. இதில் முதல் தாள் காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும், இரண்டாம் தாள், 2:30 மணி முதல் 4:30 மணிவரையிலும் நடந்தது.

இந்த தேர்விற்கு மொத்தம், 1,852 பேர் விண்ணப்பித்தனர். இதில் முதல் தாள் தேர்வில், 1,551 பேரும், இரண்டாம் தாள் தேர்வில் 1,534 பேரும் கலந்து கொண்டனர். இந்த தேர்வு பணியில், 300க்கும் மேற்பட்ட அலுவலர்கள், ஆசிரியர்கள் ஈடுபட்டனர்.

தேர்வு மையங்களில் முறைகேடுகளை தடுப்பதற்காக ஜாமர் கருவிகளும், அனைத்து தேர்வு அறைகளிலும் கண் காணிப்பு கேமராக்களும் பொருத்தப் பட்டன. அனைத்து நிகழ்வுகளும் வீடியோவில் பதிவு செய்யப்பட்டன.

தேர்வர்கள் 'பயோமெட்ரிக்' சரி பார்ப்பு செய்யப்பட்ட பின்னரே, தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். தேர்வு மையத்தின் நுழைவு வாயில் சரியாக காலை, 9:30 மணிக்கும், மதியம் 2 மணிக்கும் மூடப்பட்டது. சில மாணவர்கள் கால தாமதமாக தேர்வு மையங்களுக்கு வந்தனர். அவர்கள் தேர்வு மையங்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

தேர்வில் கேட்கப்பட்ட கேள்விகளின் விடைக்குறிப்பு, https://recruitment.py.gov.in, என்னும் அதிகாரப்பூர்வ இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்யப் பட்டுள்ளது. இதில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் இன்று மதியம், 12 மணிக்குள் தேர்வர்கள் தெரிவிக்கலாம். பெறப்படும் ஆட்சேபணைகளை ஆராய்ந்த பிறகு, விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் வெளியிடப்படும். இந்த தகவலை தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி பங்கஜ்குமார் தெரிவித்துள்ளார்.

# கடற்படை சிம்பொனி இசைக்குழுவிற்கு முதலமைச்சர், சபாநாயகர் பாராட்டு



புதுச்சேரி, அக். 28-
இந்திய கடற்படையின் தமிழ்நாடு புதுச்சேரி கடல் பகுதி பிரிவின் சார்பாக புதுச்சேரி ஜிப்மர் கலையரங்கில் நடைபெற்ற கடற்படை சிம்பொனி இசைக் குழுவின் இசை நிகழ்ச்சியில் முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் செல்வம் ஆகியோர் தலைமை விருந்தினர்களாக கலந்துகொண்டு இசை நிகழ்ச்சியை நடத்திய கடற்படை சிம்பொனி இசை குழுவினருக்கு நினைவு பரிசு வழங்கி பாராட்டினர். இந்த நிகழ்ச்சியில் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் சாய் ஜெ. சரவணன் குமார் மற்றும் கடற்படை உயர் அதிகாரிகள், புதுச்சேரி அரசு செயலர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தூய்மைப் பணி



ராமநாதபுரம், அக். 28-
தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை மற்றும் பருவநிலை மாற்றம் துறை சார்பாகவும், ராமநாதபுரம் மாவட்ட தேசிய பசுமைப் படை இயக்கம் சார்பாகவும்,இராமநாதபுரம் வருவாய் மாவட்ட அளவிலான சமூக தூய்மைப் பணி ராமநாதபுரத்திலுள்ள சிதம்பரம் பிள்ளை ஊரணியில் சிறப்பாக நடைபெற்றது. ராமநாதபுரம் நகர் மன்றத் தலைவர் கார்மேகம் தலைமையேற்று இத்தூய்மைப் பணியை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்விற்கு ராமநாதபுரம் மாவட்ட மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் துணைப் பொறியாளர் கார்த்திக், ராமநாதபுரம் நகராட்சியின் நகர் மருத்துவ அலுவலர் டாக்டர். ரெத்தினகுமார் முன்னிலை வைத்தார்கள். மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பாக தலைவர்களுக்கும், மாணவர்களுக்கும் துணைப் பொறியாளர் அவர்களால் மீண்டும் மஞ்சப்பைகளை நினைவுபடுத்தும் வகையில் மஞ்சப்பைகள் வழங்கப்பட்டன. சமூக தூய்மைப்பணிக்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் ராமநாதபுரம் மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் பெர்னாடிட் சிறப்பாக செய்திருந்தார். மேலும் இந்நிகழ்வில் ராமநாதபுரம் நகராட்சியின் சுகாதார ஆய்வாளர்கள், தேசிய பசுமைப் படையின் ஒருங்கிணைப்பாசிரியர்கள் பரமேஸ்வரன், குணசேகரன், ரமணி, செந்தில் மற்றும் நகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். அனைத்து நிகழ்வுகளையும் தேசிய பசுமைப் படையின் பரமக்குடி கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தீனதயாளன் ஒருங்கிணைத்தார். ராமநாதபுரம் மாவட்ட அளவில் நடைபெற்ற இத்தூய்மைப் பணியில் ராமநாதபுரம் நகர் பள்ளிகளின் பசுமைப் படை மாணவர்கள் 60 பேர் மற்றும் ஆசிரியர்கள் உற்சாகத்துடனும், தன்னார்வத்தோடும் கலந்துகொண்டனர். தூய்மைப் பணியில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், தூய்மைப் பணியாளர்களுக்கும் சுத்தமான, சுகாதாரமான, உணவு மற்றும் தேனீர் வழங்கப்பட்டது. மேலும் நிறைவாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தொடர்பான உறுதிமொழியை அனைவரும் ஏற்றனர். நிறைவாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தீனதயாளன் நன்றியுரை ஆற்றினார்.

# அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்தல் பயிற்சி



புதுக்கோட்டை, அக். 28-
புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்டியில் வானவில் மன்றம் சார்பில் நடைபெறும் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தல் குறித்த பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் தமிழ்ச்செல்வி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய செயலாளரும், பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா ஆய்வுக் கட்டுரை எழுதுவது குறித்து பயிற்சி அளித்து பேசும்பொழுது, வானவில் மன்ற போட்டிகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அறிவியல் மற்றும் கணித அணுகுமுறைகள் என்ற மையக்கருத்துடன் ஆய்வு கட்டுரை சமர்ப்பிக்க வேண்டும். மாதிரி செயல் திட்டங்களான நாம் வாழும் பகுதியில் நீர் ஆதாரங்களை கண்டறிந்து அவற்றை பாதுகாக்கும் வழிமுறை குறித்து ஆய்வு அறிக்கை தயாரித்தல், கழிவுநீர் அகற்றுதல், பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தாமல் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தங்கள் வாழும் பகுதியில் உள்ள பல்வேறு நீர் நிலைகளில் கிணறு குளம், அடி பைப்பு கார்ப்பரேஷன் தண்ணீர் என்று பல்வேறு நீர் மாதிரிகளை உபயோகித்து தண்ணீர் மாதிரிகள் எடுத்து வந்து அதன் கொதிநிலை வரும்பொழுது வெப்பநிலை மாறியது கொண்டு அளவிட்டு அறியலாம் உள்ளிட்ட சோதனைகள், ஒரு நாள் அல்லது மூன்று நாட்கள் ஒரு எறும்பு புற்றின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளன என்பது குறித்து ஆராய்ந்து எழுதுதல், ஊரில் உள்ள விவசாயம் நிலம் குறித்து ஆய்வு செய்தல், கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை குறித்து ஆய்வு செய்தல், நாம் வாழும் பகுதியில் உள்ள பல்வேறுபட்ட மரங்களின் வகைகளை கண்டறிந்து வகைப்படுத்தி அவற்றின் பயன்களை தொகுத்து ஆராய்ந்து அறிக்கையில் சமர்ப்பித்தல், உணவு பதப்படுத்தலில் ஏற்படும் வேதியல் மாற்றங்களை ஆராய்ந்து மாதிரிகளோடு விளக்குதல், கதிர்வீச்சின் பயன்களும் பாதிப்புகள் குறித்த ஆய்வு, பல்வேறு நீர்நிலைகளில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் பனிக்கட்டியாக எடுத்துக்கொள்ளும் காலத்தை கணக்கிட்டு ஆராய்தல், விவசாயத்தில் பயன்படுத்தப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு உகந்த பசுமை குடில் விவசாயம் போன்ற புதிய தொழில்நுட்பகளை ஆராய்ந்து அறிக்கை அளித்தல், மழைக்காலத்தில் ஏற்படக்கூடிய நோய்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மழையை அளவிடுவது எப்படி உள்ளிட்ட பல்வேறு வகையான தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம் என்று பயிற்சியளிக்கப்பட்டது. மாணவர்கள் ஆர்வமுடன் கேட்டறிந்தனர். இந்நிகழ்வில் ஆசிரியர் சிந்தியா உள்ளிட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# பசும்பொன்னில் தேவர் ஜெயந்தி விழா யாகபூஜையுடன் தொடக்கம்



பசும்பொன், அக். 28-
ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் ஒவ்வொரு ஆண்டு முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி விழா 3 நாட்கள் விமரிசையாக நடைபெறும். அதன்படி இந்த ஆண்டு ஜெயந்தி விழா இன்று தொடங்கி வருகிற 30நந் தேதி வரை நடக்கிறது.

முதல் நாள் இன்று ஆன்மிக விழாவாகவும், 2ம் நாள் அரசியல் விழாவாகவும், 3ம் நாள் ஜெயந்தி விழா வாகவும் நடைபெறும்

ஆன்மிக விழாவை முன்னிட்டு இன்று பசும்பொன்னில் உள்ள தேவர் நினைவிடம் மற்றும் அவரது சிலை வண்ண மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. இன்று காலை கணபதி யாக பூஜைகள் நடந்தது. பின்னர் அங்குள்ள பால முருகன், தேவர் திருமகனார் கோவிலுக்கு சிறப்ப பூஜை நடந்தது. இன்று மாலை 1008 திருவிளக்கு பூஜைகள் நடை பெறுகின்றன. இரவு ஆன்மீக சொற்பொழிவு, வள்ளி திருமண நாடகம் நடக்கிறது.

நாளை (29 ந்தேதி) நடைபெறும் அரசியல் விழாவில் அரசியல் சொற் பொழிவுகள் நடைபெறும். மேலும் பெண்கள் உள்பட ஏராளமானோர் பால்குடம் மற்றும் முளைப்பாரி, வேல் காவடி எடுத்து வந்து நேர்த்திக்கடன் செலுத்து வார்கள்.

முக்கிய நிகழ்ச்சியான தேவர் ஜெயந்தி விழா வருகிற 30ந்தேதி (புதன்கிழமை) நடைபெறுகிறது. அன்றயை நாளில் அரசு சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேவர் நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். அ.தி.மு.க. சார்பில் முன்னாள் முதலமைச் சர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள், அமைப்பினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

தேவர் ஜெயந்தியை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். ராமநாதாபுரம், சிவகங்கை, மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● திங்கள் ● அக்டோபர் 28, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# பெண்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வரும் முதல்வர்

## சேலம் மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி




சேலம், அக். 28-

முத்தமிழறிஞர் கலைஞர் பெண்கள் சமுதாயத்தில் தற்சார்பாக வாழ்வதற்காக தமிழ்நாட்டில் முதன்முதலாக 1989ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களை துவக்கி வைத்தார்கள். இதன் நோக்கம் பெண்களின் வறுமையை ஒழிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மகளிரின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப் பெண் உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க பல்வேறு திட்டங்களை பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் இதுவரை இல்லாத வகையில் வங்கி கடன் உதவிகள் மகளிரின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வழங்கி உள்ளார்கள். இத்தகைய திட்டங்கள் அனைத்துத்தரப்பு மக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி தெரிவித்துள்ளதாவது: தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் ஊரகப் பகுதியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நகரப் பகுதிகளில் விற்பனை செய்ய ஏதுவாக ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட அளவிலான முதன்மை விற்பனை வளாகமும், தேவையின் அடிப்படையில் கூடுதல் வணிக வளாகங்களும் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இவ்வணிக வளாகங்களுக்கு “பூமாலை வணிக வளாகம்“ எனப் பெயர் சூட்டி திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மகளிரின் முன்னேற்றத்திற்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் சேலம். புதிய பேருந்து நிலையம் அருகில் செயல்பட்டுவரும் பூமாலை வணிக வளாகத்தினை ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து, பழுதுநீக்கம் செய்து, வண்ணம் பூசி தமிழ்நாடு முதலமைச்சரால் 28.06.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது. இப்பூமாலை வணிக வளாகத்தில் மொத்தம் 18 வணிகக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கடைகள் அனைத்தும் மகளிர் சுய உதவிக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

அதேபோன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் சேலம் மாவட்டத்தில் 20 வட்டார பகுதிகளிலுள்ள 385 ஊராட்சிகளிலும் கடந்த மூன்றாண்டுகளில் 4,063 சுய உதவிக்குழுக்களும், தமிழ்நாடு மாநில நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தில் சேலம் மாநகராட்சி, 6 நகராட்சிகள் மற்றும் 31 பேரூராட்சிகள் உட்பட மொத்தம் 38 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் கடந்த மூன்றாண்டுகளில் 3,954 சுய உதவிக்குழுக்கள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் நாளது தேதி வரை 13,392 சுய உதவிக்குழுக்கள் மற்றும் நகர்ப்புர பகுதிகளில் 7,568 சுய உதவிக்குழுக்கள் என மொத்தம் 20,960 சுய உதவிக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளில் வங்கி கடன் இணைப்பாக 2021–2022ஆம் ஆண்டில் 17,050 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.900.21 கோடியும், 20222023ஆம் ஆண்டில் 17,968 குழுக்களுக்கு ரூ.1,007.80 கோடியும், 2023–2024ஆம் ஆண்டில் 18,101 குழுக்களுக்கு ரூ.1,151.20 கோடியும், நடப்பு 2024–2025ஆம் ஆண்டில் 14.822 குழுக்களுக்கு ரூ.745.54 கோடியும் என சுழற்சி முறையில் சேலம் மாவட்டத்தில் மொத்தம் 67,941 சுய உதவிக்குழுக்கள் ரூ.3,804.75 கோடி ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மூலம் வங்கி இணைப்பு பெற்று பயனடைந்துள்ளனர்.

மகளிரின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அறிந்து கொண்டு மகளிர் பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியரகத்தில் இரண்டாம் தளம், அறை எண்: 207இல், இயங்கும் மகளிர் திட்ட அலுவலகத்தை அணுகிப் பயன்பெறலாம். இவ்வாறு தெரிவித்தார்.

சேலம், பூமாலை வணிக வளாகத்தில் நவீன ஆடைகள் மற்றும் பைகள் தயாரிக்கும் தொழில் நடத்திவரும் தேன்கூடு மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்த தேன்மொழி தெரிவித்ததாவது: நான் எனது குடும்பத்தினருடன் கிச்சிபாளையம் பகுதியில் வசிக்கின்றேன். எனக்கு ஒரே மகள், அவர் கல்லூரி படிப்பை முடித்து வேலை தேடி வருகிறார். நான் எனது கணவரைப் பிரிந்து எனது அம்மா வீட்டில் மகளுடன் வாழ்ந்து வருகிறேன். தையல் தொழில் தெரிந்த நான் கடந்த 5 முதல் 6 ஆண்டுகளாக கிச்சிபாளையம் பகுதியில் தனியாக தையல் இயந்திரம் வைத்து துணி தைக்கும் தொழில் செய்து வந்தேன். அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தை வைத்து எனது மகளை படிக்க வைத்திட மிகவும் சிரமப்பட்டேன். எனக்குத் தேவைப்படும் சிறு, சிறு பொருட்களைக் கூட வாங்க தாய். தந்தையினரின் உதவியை நாடவேண்டிய கடினமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்தேன். இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பூமாலை வணிக வளாகத்தினை புதுப்பித்து திறந்து வைத்ததாக செய்தித்தாள்கள் வழியாக அறிந்தேன்.

நான் ஏற்கனவே தேன்கூடு என்ற மகளிர் சுய உதவிக்குழுவினை நடத்தி வந்ததால் உடனடியாக மாவட்ட ஆட்சியரகத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு வணிக வளாகத்தில் கடை ஒன்று வாடகைக்கு வேண்டி விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பத்தினைப் பரிசீலனை செய்த அலுவலர்கள் சேலம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் எனக்கு 160 சதுர அடி அளவிலான கடை ஒன்று வாடகைக்கு வழங்கினர்.

தற்போது இக்கடை சிறிது சிறிதாக முன்னேற்றம் அடைந்து 4 தையல் இயந்திரங்களை வைத்து பெண்களுக்குத் தேவையான ஆடைகள் மற்றும் பெண்களுக்கான ஹேண்ட் பேக் தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். மாத வருமானமாக ரூ.4,000 கடையின் வாடகை போக ரூ.20,000 முதல் ரூ. 25,000 கிடைக்கிறது. ஏராளமான தொடர் வாடிக்கையாளர்களும் எனக்கு கிடைத்துள்ளனர். இதன் மூலம் நாங்கள் எவருடைய தயவும் இன்றி சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக தற்சார்பாக வாழ முடிகிறது. குடும்பத்தினரின் அன்றாட தேவை பூர்த்தி அடைந்து, பொருளாதார நிலையும் மேம்பட்டுள்ளது. என்னைப் போன்ற பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் ஒரே குழுவாகச் சேர்ந்து செயல்பட வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.

சேலம், பூமாலை வணிக வளாகத்தில் தையலகம் நடத்திவரும் ஸ்ரீ சௌடாம்பிகை மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்த அமுதா தெரிவித்ததாவது: நான் எனது குடும்பத்தினருடன் சூரமங்கலம், போடிநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். எனது கணவர் இரு சக்கர வாகனம் பழுது நீக்கும் கடை வைத்திருக்கிறார். எங்களுக்கு ஒரு மகள். ஒரு மகன் உள்ளனர். மகளுக்கு திருமணம் முடிந்தது. மகன் நான்கு சக்கர வாகனம் மெக்கானிக் தொழில் செய்து வருகிறார்.

நான் கடந்த 25 வருடங்களாக வீட்டிலேயே தையல் இயந்திரம் வைத்து அருகில் உள்ள மகளிர் வழங்கும் ஆடைகளை தைத்து வழங்கி வந்தேன். இதன்மூலம் எனக்கு ஒரு நாளைக்கு ரூ.200 வரை வருமானம் கிடைத்தது. மேலும், ஸ்ரீ சௌடாம்பிகை சுய உதவிக்குழு உறுப்பினர் என்ற மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினராக இருந்து வருகின்றேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் என்னைப் போன்ற மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் சுய தொழில் மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்ட பூமாலை வணிக வளாகத்தினை புதுப்பித்து திறந்து வைத்தார்கள் என்ற செய்தி அறிந்து, தையலகம் அமைக்க வாடகைக்கு கடை வேண்டி விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பத்தினை ஏற்றுக்கொண்ட அலுவலர்கள் சேலம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் எனக்கு 100 சதுர அடி அளவிலான கடை ஒன்றை ரூ.3,000 என்ற குறைந்த மாத வாடகைக்கு வழங்கினார்கள். அனைத்துப் பொதுமக்களும் ஒருங்கிணைக்கும் மையமாக உள்ள புதிய பேருந்து நிலையம் அருகில் இவ்வளவு குறைந்த வாடகையில் கடை கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

தற்போது ஒரு வருட காலமாக இதில் தையலகம் நடத்தி வருகிறேன். மாத வருமானமாக ரூ.12,000 முதல் ரூ.15,000 வரை வாடகைக்கு போக இலாபம் கிடைக்கிறது. எனது வருமானம் இரட்டிப்பு ஆகி தொழில் மேம்பாடு அடைந்துள்ளது. நிறைய வாடிக்கையாளர்கள் என்னைத்தேடி வரத் தொடங்கி உள்ளனர். அதேபோன்று, சுய உதவிக்குழுக் கடனாக ரூ.2 லட்சம் எனது குடும்பத் தேவைக்காக பெற்று தற்போது வரை திரும்ப செலுத்தி வருகிறேன். எங்களைப் போன்ற எளிய பின்னணியில் உள்ள பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும் திட்டங்களைச் செயல்படுத்தி அவற்றை பெருவதற்கு வழிமுறைகளை வழங்கி ஊக்குவித்துவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்தார்.







செய்தி வெளியீடு:
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
சேலம் மாவட்டம்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007




# குஜராத்தில் முதல் தனியார் ராணுவ விமான ஆலை திறப்பு

# முதல்வர் தலைமையில் சட்டசபை தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனை கூட்டம்



# தீபாவளி சிறப்பு பஸ்கள் இன்று முதல் இயக்கம்


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 28-10-2024 திங்கள்கிழமை •வெளியூர்: 29-10-2024 செவ்வாய்க்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்